# மானிட வாழ்வும் தேரையர் தெளிவும்

# Human Life and the Enlightenment of Therayar

***முனைவர் க. சிங்காரவேலு***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர், இந்தியா

**Dr. K. Singaravelu**
*Assistant Professor, Department of Tamil*
*Tiruvalluvar University*
*Vellore, India*

**Citation**: Singaravelu, K. "Human Life and the Enlightenment of Therayar." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 4, 2025, pp. 20-27.

## ஆய்வுச் சுருக்கம்
*உலகில் மனிதன் தோன்றிய நாள் முதலே நோயும் தோன்றிவிட்டது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழியாகும். உணவு மாறுபாடு, காலநிலை மாறுபாடு, பண்பாட்டின் மாறுபாடு போன்ற காரணங்களால் மனிதனுக்கு நோய்கள் ஏற்கடுகின்றன. நோய்கள் ஏற்படாமல் தடுப்பதே அறிவுடைமையாகும். நோய் தடுப்பினை அறிவுறுத்தவே நவநாதச் சித்தர்களில் ஒருவரான தேரையர் நோய்கள் ஏற்படும் விதம், நோய்களின் வகைகள், நோய் அனுகாவிதி போன்றவற்றைத் தனது படைப்புகளில் கூறியுள்ள முறைகள் மனிதனின் வாழ்வியல் முறைகளுக்கு எவ்வாறு துணையாக அமைகிறது என்பதை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*
***திறவுச் சொற்கள்:*** *தேரன், சற்குரு சேகரப்பா பாண்டு.*

## Abstract
*From the day humans appeared in the world, disease also formed. "Health is wealth" is a proverb which explains that a life without disease is wealth without deficiency. Diseases befall humans due to changes in food, changes in climate, and changes in culture. It is wisdom to prevent diseases from occurring. The aim of this study is to explain how the methods stated by Theraiyar, one of the nine Navanatha Siddhas, in his works regarding the manner in which diseases occur, the types of diseases, and the pathology of diseases, are helpful for human lifestyles in advising on disease prevention.*
***Keywords: Theran, Sarguru Sekarappa Pandu.***

## முன்னுரை

*சித்தி என்னும் சொல் அறிவைக் குறிக்கும். அறிவை அறிவால் அறிதல் எம் பணி என வாழ்வியலை மேற்கொண்டவர்கள் சித்தர்கள். சித்தர்கள் நவநாத சித்தர்கள், பதிணென் சித்தர்கள், நவகோடிசித்தர்கள், நவசித்தர்கள் எனப் பல்வேறு பிரிவினர்கள் உள்ளதாக குறிப்பிடுவர். பொதுவாச் சித்தர்களை யோகசித்தர்கள், தத்துவசித்தர்கள், மருத்துவ சித்தர்கள் எனக்குறிப்பிடுவதே பொருத்தமானதாகும். போகர், அகத்தியர், தேரையர் ஆகியோர்கள் மருத்துவச் சித்தர்களில் அடங்குவர். மருத்துவ சித்தர்களில் தேரையர் மானிட வாழ்வில் மனிதர்கள் நோய் அணுகாமலும் நோய் ஏற்பட்டால் அதை தடுப்பதற்கான வழிமுறைகளையும் கூறியவர் தேரையரே ஆவர்.*

**தேரையர் பெயர் விளக்கம்**

*தேரன் என அழைக்கப்படும் தேரையரின் பெயரை பிரித்துப்பார்த்தால் தேர் + அன் - பகுதி விகுதிகளாய் முடிந்த பகுபதமாய் தேர் என்னும் பகுதி தேர்ச்சியையும் அன் என்பது ஆண்பால் விகுதியுடன் சேர்ந்து தேர்ச்சியை உடையவன் எனப் பொருள்படும். தேரையன் என்னும் சொல்லைப் பிர்த்துப்பார்த்தால் தேர்+ஐ+அன் எனப் பிரிக்கப்பட்டு பகுதி விகுதிகளுடன் சிறப்புப்பொருளை உணர்த்துவதாகும். தேரனின் இயற்பெயர் இராமதேவன் எனவும் இவர் தருமிய சௌமியரின் மாணவரென்றும் அபிதானசிந்தாமணி குறிப்பிடப்படுவது ஏற்புடையதாகாது. ஏனெனில் இராமதேவர் என்று அழைக்கப்படுவர் யாகோபுசித்தர் என்ற பெயரில் விளங்கியதாகவும் பதிணெண்சித்தர்களில் ஒருவராக இராமதேவர் திகழ்ந்ததால் தேரன் என்பதே அவருடைய இயற்பெயராகும் என்பதை அவரியற்றிய மருத்துவ பாரதத்தின் சிறப்புப்பாயிரத்தின் மூலம்,*

***மருத்துப் பாரத நாடகமிதுதனை மதித்து***
***விருத்தப் பாவினுந் தருவினு மிராகமேல் விரித்துக்***
***கருத்துக் கேற்றிடச் செய்தனன் தேரன் (தே.ம.பாரதம் சி.பாயிரம்)***

*மூலமும் மேலும், தேரையர் இரும்புச் செந்தூரம் செய்யும் பாடலில்,*

***தாட்டிகமாகப் புரிந்தால்***
***உதாரஞ் செய்யு மொருதேரன் என்பாரே - (தேரையன் மகாகரிசல் 5)***

*என்ற பாடல் மூலமும்,*

***செயுமுறை தெரிகிலாத் தேரன் நாயடியேன்***
***உயுமுறை வயித்திய வுரைத் தமிழ்க் கரிசல் (தேரையன் மகாகரிசல்)***

*என்ற பாடல் மூலமும், தேரன் என்ற பெயரே அவருடைய இயற்பெயர் என்பதை அறியலாம். தேரன் இளமையிலே பன்மொழிகளைக் கற்று யானையேற்றம், குதிரையேற்றம், சிலம்பம் போன்ற கலைகளைக் கற்று தேர்ச்சி பெற்றதால் இவர் தேரையன் என்று அழைக்கப்பட்டான். இவருடைய சீடரான யூகிமுனி, தேரனை தேரையர் முனிவர் என்று குறிப்பிடுவதை,*

***புலத்தியருந் தேரையற்குப் புகன்றிட்டாரே***
***புகன்றிட்டார் தேரையனா முனிவன் தானும்***
***பூதலத்தில் யூகியா மெனக்குச் சொல்ல (யூகிமுனிவர் சிந்தாமணி 800)***

*என்ற பாடலடியில் தேரையர் தேரையனார் என்ற சிறப்பு கருதி வழங்கப்பட்டதை அறியலாம்.*

**தேரையரின் காலம்**

*தேரையர் தொண்டை வள நாட்டில் பாலாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தவர். தேரையருடைய தந்தையர் நம்பிபூபதி என்பவராவார். இவர் தேரையர் தரும சௌமியரிடம் சீடரிடம் பாடம் கற்றார் என்பதை,*

***நிசதரு மசவுமி யசகுரு வசமே (தேரையர் மகாகரிசல் துதி -1)***

*என்பதன் மூலமும்,*

***தரும சவுமிய தன் மந்திரி சற்குரு***
***பரன் மகிமையுட் கொண்டு பேயகத்தேரன்***
***செயுமுறைத்தெரிவிலாத் தேரைனடியோன்***
***உயுமுறை வைத்திய வுரைத் தமிழ்க்கரிசல் (தேரையர் மகாகரிசல் அவையடக்கம்)***

*என்ற பாடல் மூலமும்,*

***ஆதிபரை நந்தியமுதக் கடத்தோ குதித்தோன்***
***அசுவனி தேவர்விரி யலைகடலை நுகர்ந்தோன்***
***கோதிலரும் புலத்தியனந் தரும சவுமியனிக்***
***குரவரும் (தேரையர் தைலவருக்க சுருக்கம்-7)***

*என்ற பாடல் மூலமும் தரும சவுமியர் இவருக்கு பாடம் போதித்தவர் என்பதை அறியலாம். தேரையரின் காலம் 16 ஆம் நூற்றாண்டு எனக் கருதலாம். ஏனெனில் தெலுங்குக் கவிஞர் வேமனரைப் பற்றி தம் நூலில்,*

***உத்தமஞ்சிவாடு சுமி நீ வெனவேமனார் வடுகி***
***லுரைத்தல் போல (தேரை மகாகரிசல் 5)***

*என்று குறிப்பிடுவதன் மூலம் வேமனாரின் காலம் 1486 முதல் 1505 என்று அறிவதால் அவர் காலத்திற்கு பிற்பட்டவர் தேரையர் என அறியலாம். மேலும் உருளைக்கிழங்கு கற்பம் பற்றி குறிப்பிடுவதால் உருளைக்கிழங்கு 16 ஆம் நூற்றாண்டிலே தான் இந்நதியாவிற்கு வந்தது என்பதால் தேரையரின் காலம் 16 ஆம் நூற்றாண்டு எனக்கருதலாம்.*

**தேரையரின் நூற்படைப்புகள்**

*தேரையர் மொத்தம் இருபத்தியொரு நூல்களைப் படைத்துள்ளார் எனக் குறிப்பிடுகின்றனர். ஆயினும் பாயிரப் பாடல் மூலம் பன்னிரெண்டு நூல்களே விளக்கப்படுவதை, சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா*

***தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி***
***மிகா வண்ணம் நாண் மாலை யமக வெண்பா***
***விளங்கெதுகைப் பாயிவை யெல்யலொருமெச்சு***
***மகா மகிமைக் கரிசலெனு முறையீராறும்***
***வேதாந்த சித்தாந்த வைத்ய வாத***
***முகாதியினு மசையாத விரிவுள் வேத***
***முத்தமுமா விளங்கு மிது சத்தியந்தானே (தேரையர் மகா கரிசல்)***

*என்ற பாடல் மூலம் அறியலாம். பாயிரப்பாடலில் குறிப்பிடப்படாத எஞ்சிய நூல்களான நீர் நிறக்குறி, நீர்மெய்குறி, தைலவர்க்க சுருக்கம், தினக்கிரமாலங்காரம், சிகிச்சைக்கிரமம் நோய் மருந்தளவை போன்ற நூல்கள் தேரையர் காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம். தேரையர்தரு, வைத்திய பள்ளு நாடகம் போன்ற நூல்கள் தேரையர்மருத்துவ பாரதத்தில் உள்ளடக்கமாய் காணப்படுவதன் மூலம் தேரையர்படைத்த இருபத்தியொரு நூல்களையும் அறிய முடிகிறது.*

**நோய் தோன்றுவதற்கான காரணங்கள்**

*நோயானது நொய் என்னும் சொல்லின் அடிப்படையில் தோன்றியது. நொய்தல் என்பது நலிதல் என்னும் பொருள்படும். நோய் ஏற்பட்டால் மெலிந்து காணப்படுவர். நோய்களானது வாத, பித்த, சிலேட்டும மாறுபாட்டால் ஏற்படும் என்பதை,*

***மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்***
***வளிமுதலா எண்ணிய மூன்று (குறள். 941)***

*அறியலாம். மேலும் நோயானது காலநிலை மாறுபாட்டாலும், ஐம்பூதங்களின் மாறுபட்ட செயல்பாடுகளாலும், விலங்குகளாலும் ஏற்படுகிறது. நோய் வருவதற்கான காரணங்களாக தேரையர் குறிப்பிடும் காரணங்களாக அதிக உணவு உண்ணுதல், அதிக அளவு*

*நீர் குடித்தல், விருப்பம்போல படுக்கையில் இருத்தல், அதிகமான பெண் சேர்க்கை, அதிக நேரம் கண்விழித்தல், மிகுந்த களைப்பு உண்டாதல், உணவுகளின் கேடுகள், மனவருத்தம், பழைய மலம் தேங்கியிருப்பதனாலும் நோய் உண்டாகும் என்பதை,*

***உண்டியில் பொல்லாங் காலும் ஒண்டொடி வருத்தத்தாலும்***
***கண்டுயி லாமை யாலும் கடும்பக லோட்டத்தாலும்***
***பண்டையில் மல்கட் டாலும் பழைய சீரணத்தி காலும் (தேரையர் வாகடம்/4)***
***செரித்துறங் காதிருந்து திகழவே உன்கையாலும்***
***தரிப்புறக் கிடப்பதன்றித் தளர்ந்துகீழ் கிடக்கையாலு***
***மருந்திடுங் கிரிகையாலும் மதிபல தெண்டிப்பாலும்***
***பெருமத்திடு முதரந்தன்னில் பிறந்திடும் நோய்கள் தாமே (தேரையர் வாகடம் 385)***
***புறவரை யுண்கை யாலும் போதநீ ருண்கை யாலும்***
***சுருளவே முடக்கிக் கொண்டு சுகமறக் கிடக்கை யாலும்***
***மருளவே மேடு தன்னில் மனமுறக் கிடக்கை யாலும்***
***பெருகவொண் டொடியினாலும் பிறக்குநோ யென்றுதானே (தேரையர் வாகடம் 382)***

*என்ற பாடல் மூலம் உடம்பினை முடக்கி படுத்தாலும், மேடுபள்ளங்களில் படுத்தாலும் நோய்கள் உண்டாகும் எனத் தேரையர் குறிப்பிடுவதை அறியலாம்.*

**தேரையர் குறிப்பிடும் நோயின் வகைகள்**

*தேரையர் நோயின் வகையினை 4448 நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தியெட்டு எனக் குறிப்பட்டுள்ளார். இவை கழுத்தில் தோன்றுபவை, தலையில் தோன்றுபவை, மார்பில் தோன்றுபவை, காலில் தோன்றுபவை எனப் பகுத்து கூறியுள்ளார். அவை சுரம் 40, சன்னி 13, தோடவகை 7, அதிசாரம் 6, ஆகமொத்தம் 66, மேகம் 21, பாண்டு 10, குன்மம்8, குட்டம் 18, வலி 8, மூலம் 100, சூலை 20, வாதம் 80, பித்தம் 40, ஐயம் 100, இராசரோகம் 6, காசம் 8, வேகமாக இயங்கும் மூச்சுநோய் 9, தலையில் தோன்றும் நோய்கள் 210, விழி நோய்கள் 96, கேட்கும் காதில் 23, நாற்றத்தை உணரும் மூக்கில் 20, துடியில் 20, வாயில் 70, பற்களில் 20, பற்களின் ஈறில் 16, நாவில் 49, சிறுநாவில் (உள்நாக்கு என்னும் உறுப்பு) 6, தொண்டை என்னும் உறுப்பில் கழுத்துவரை 120, தோளில் 18, மார்பில் 21. இதயத்தில் 21, மலத்தில் 7, குடலில் 320, சிறுகுடலில் 270, உந்தியைச் சுற்றி 320, இடையில் 16, நறுதத்தில் 9, குய்யத்தில் (கீழ்வாயும் அதுசார்ந்த இடமும்)100, மண்டைவினை 15, அந்திரப்பிணி 6, அற்புதம் 5, யந்திரங்களில் 26, மூலாதரத்தில் 24, பவனமீதில் 40, தொடையில் 30, முழந்தாளில் 20, பாதத்தில் 63, மூளைநோய் 360, எலும்பில் 100, நரம்புகளில் 228, இறைச்சியில் 21, குருதியில் 205, தசையில் 80, மயிரில் 30, இரணநோய் 200, உடலில் பொதுமையான நோய் 59, கடிவிடத்தில் 160, செடி (மூலிகை) விடம் 120, விலங்கினத்துக்கு 257, பறவையில் 96, கருவியால் 18, நீரில் வளரும் செடியின் மூலத்துடன் 34, இவையாவும் கூட்டிய தொகைதான் 4448 நோய்கள் என்பதை,*

***நாலா யிரத்தின் நானூ றதனின்***
***மேலா நாற்பத் தெட்டு வியாதியும்***
***பூவுல கதனிற் பூண்டிடும் பிணிகள்***
***மேவுமுன் னூற்படி விவர முரைத்தார்***
***சுரமது தானும் தோன்றிடு நாற்பது***
***உரமுள சன்னி ஓர்பதின் மூன்று***

*மதித்திடுந் தோட வகையது மேழு*
*அதிர்ந்திடு மெய்யை அதிசார மாறு*
*ஆகச் சுரந்தா னறுபத் தாறும்*
*மேக மிருபதின் மேலே யொன்று*
*பலத்தை யழித்திடும் பாண்டினி லொருபது*
*குன்ம மெட்டுக் குட்டமீ ரொன்பது*
*வன்ம மான வலியிரு நாலு*
*மூலம் நூறு மூண்டிடு மெய்யில்*
*சூலை தன்னில் சூழ்ந்திடு மிருபது*
*வாதந் தன்னில் வகுத்திடு மெண்பது*
*மீதே பித்தம் வீழ்ந்திடு நாற்பது*
*சேற்று மத்தில் சேர்ந்திடு நூறு*
*ஆற்று மத்தில் அணுகிய ரோகம்*
*ராச நோவில் நவின்றிடு மாறு*
*காச மெட்டு கடுமூச் சொன்பது*
*சிரமது தன்னில் சேர்ந்திடு நோய்தான்*
*இருநூற்றொருபது என்றே விளங்கும்*
*தோன்றிய விழியில் தொண்ணூற் றாறு*
*ஏன்றிடுஞ் செவியில் இருபத்து மூன்று*
*வாசம் புரியும் வளர்ந்திடு நாசியில்*
*நேசமுடனே நிறைந்திடு மிருபது*
*துடியது தன்னில் தோன்றிடு மிருபது*
*வடிவுள வாயில் வருபிணி யெழுபது*
*தந்தந் தன்னில் சாற்று மிருபது*
*வந்திடு மெயிறில் வருபதி னாறு*
*நாவது தன்னில் நாற்பத் தொன்பது*
*மேவு சிறுநாவில் விளங்கிடு மாறு*
*தொண்டை யதனில் சூழ்ந்திடும் பிணிகள்*
*கண்டம் வரைக்கும் கழறுநூற் றிருபது*
*ஓங்கிய தோளி லோர்பதி னெட்டுத்*
*தாங்கிய மார்பில் தரித்த மூவேழு*
*இருதயந் தன்னி லிருபத் தொன்று*
*தருமலந் தன்னில் சாற்றிடு மேழு*
*குடலினில் மூன்னூற் றிருபது குறியா*
*மிடவஞ் சிறுகுட லிருநூற் றொருபது*
*நாவியைச் சூழ நவின்றமுன் னூற்றின்மேல்*
*கோவிய மாகக் குறித்திடு மிருபது*
*நடுவிலீ ரெட்டு நறுதம் ஒன்பது*
*குய்ய மதனில் குறித்திடு நூறு*
*மெய்யு மண்டை வினைபதி னைந்து*
*அந்திர மாறு அற்புத மஞ்சு*

*யந்திரி யிந்தி லிருபத் தாறு*
*மூலா தாரத்தில் மூன்றெட் டாகும்*
*மேலாய்ப் பவன மீதினில் நாற்பது*
*தொடையது தன்னில் தோன்றிடு முப்பது*
*நடையெனு முழந்தாள் நாலைந் தென்னும்*
*அடியது தன்னி லறுபத்து மூன்று*
*மூளையைப் பற்றி முந்நூற் றறுபது*
*கோளை யெலும்பில் கொண்டது நூறு*
*நரம்பது தன்னில் நாடி யிடும்வினை*
*சிரந்தாள் வரைக்கும் சிறந்திடும் விதங்கேள்*
*இருநூற் றிருபத் தெட்டுநோ யென்னும்*
*பருவமாங் கிஷத்தில பற்றிய ரோகம்*
*துருவமாய் மூன்றெழு விதமா மென்பார்*
*நறுசோ தரத்தில் ரெண்டுநூற் றைந்து*
*தசைதனில் வந்து தரித்திடு மெண்பது*
*பசையு முரோமம் பற்றிடு முப்பது*
*ரணநோய் தன்னில் ரண்டுநு° றதன்மேல்*
*ஆனவுட னம்பத் தொன்பதர் மென்ன*
*இவ்வகை சூழ விருந்திடும் பிணிகள்*
*கவ்வியமா யின்னங் கூடிடும் விவரங்*
*கடிவிட மதனில் கருதுநூற் றறுபது*
*செடிவிட மதனில் சேரு நூற் றிருபது*
*விலங்கினத் துக்கு விடுத்தார் புவியினிற்*
*கலங்கிடு மிருநூற் றைம்பத் தேழு*
*தோன்றும் பறவையில் தொண்ணூற் றாறு*
*ஊன்றிடு மேனத்தி லொருபதி னெட்டு*
*சலத்தில் வளர்ந்த தாபரந் தனக்கு*
*முலத்துடன் வினைதான் முப்பத்து நாலு*
*கூடிய தொகைதான் குவலயந் தன்னில்*
*நாடிய நோய்தான் நாலா யிரத்தி*
*நானூற் றதன்மேல் நாற்பத் தெட்டு (தேரையர் வாகடம் 630)*

*என்ற பாடலின் மூலம் தேரையர் நோய்களை வகைப்படுத்தி கூறியுள்ளதை அறியலாம்.*

**தேரையரின் நோய் அணுகாவிதி**

*தேரையனை தேரான் வைத்தியத்தில் தேரான் என்பது பழமொழியாகும். தேரன் இயற்றிய பாடல்களைப் படித்தும், அதிகாலையில் உணவு உண்டும், இரக்கமுள்ள மனத்துடன் நல்ல மனைவியைப் பெற்றவனும் சந்தனமும், சாந்தும் ஆகிய நல்ல பூச்சினை மேற்கொண்டவனுக்கு தலைமுடி நரைத்திருந்தாலும்கூட அவனுக்கு இறப்பு என்பது ஏற்படாது என்பதை,*

*தேரன் கவியுஞ் சிறுகாலை உண்டியும்*
*ஈர மனமுடைய இல்லாளும் - நேரே*
*அரைந்திருந்த சாந்து மகில்மணமும் பெற்றால்*
*நரைத்திருந்துஞ் சாகார் நவில் (தேரையர் வாகடம் 1)*

*என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும், நோய் அணுகாமலிருப்பதற்கு தேரையர் பின்வரும் விதிமுறைகளைக் குறிப்பிடுகிறார். அவை தூய்மை செய்த உடையை உடுத்துதல், பசுவின் பால் அருந்துதல், தென்றல் வீசும்படியான திண்ணை அமைத்தல், மலத்தையும் சிறு நீரையும் அடக்காமலிருத்தல், பெண் போகத்தில் அதிகம் ஈடுபடாமலிருத்தல், கொதிக்கவைத்து நீரை ஆறவைத்து பருகுதல், வெண்ணையை நீக்கிய மோரை அருந்துதல், உணவில் நெய் சேர்த்துக்கொள்ளுதல், வெந்நீரில் குளித்தல், பகலில் புணராது மற்றும் துயிலாது இருத்தல், மூத்த பெண்ணோடு உடலுறவுகொள்ளாமலிருத்தல், காலை வெய்யிலில் காயாமல் இருத்தல், புளித்த தயிரை சாப்பிடுதல், பழைய உணவை உண்ணாமல் இருத்தல், வாரத்தில் மூன்று நாட்களுக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்தல், இருபத்தியொரு நாளுக்கு ஒருமுறை வாந்தி மருந்தெடுத்தல், பதினைந்து நாட்களுக்கொருமுறை மயிர்களைதல் போன்ற விதிமுறைகளைப் பின்பற்றுபவரைகளுக்கு உடம்பானது வைரம்போல் உறுதிபெறும் என்பதை,*

***பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்***
***பகல்புணரோம் பகல்துயிலோம் பயோதரமும் மூத்தபேர்***
***ஏலஞ்சேர் குழலியையு மீயவெயிலும் விரும்போம்***
***இரண்டடக்கோ மொன்றைவிடோ மிடக்கையில் படுப்போம்***
***மூலம்சேர் கறிதுகரோ மூத்ததயி ருண்போம்***
***முன்னாளில் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்***
***ஞாலந்தா னழிந்தாலும் பசித்தொழிய உண்ணோம்***
***நமனார்க்கிங் கிடமேது நாமிருக்கு மிடத்தே (தேரையர் வாகடம் 5)***

*மேலும்,*

***மூன்றில் தலைக்கழுவி மூவேழில் மேல்நோக்கி***
***ஆன்றம லைம்மூன்றி லேகளையத் - தோன்றியிடும்***
***நெய்பாலோ டுண்பீரேல் நீண்ட பெருங்காயம்***
***அய்யகோ வச்சிரகா யம் (தேரையர் வாகடம் 7)***

*என்ற பாடல் மூலம் நோயின் விதிகளை அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*பதிணென் சித்தர்களில் ஒருவராக கருதப்படாத தேரையர் மானிட வாழ்வுக்கு பல நல்வழிகளைத் தந்துள்ளார். தேரையனை தேரான் மருத்துவத்தில் தேரான் என்ற மருத்துவப் பழமொழி மூலம் தேரையரின் மருத்துவ நூற்படைப்புகள் மூலமும் தேரையரின் மருத்துவ இலக்கணப் புலமை அறிவதோடு இன்றைய மருத்துவம் கற்பவர்க்கும் துணையாக அமைகிறது எனலாம்.*

*தேரன் என்ற பெயரே பின்னாளில் தேரையரன் என சிறப்புகருதி யூகிமுனிவரால் குறிப்பிடப்பட்டுள்ளது அறியத்தகுந்ததாகும்.*

*தேரையர் குறிப்பிடும் 4448 நோய்களை வைத்தே சித்த மருத்துவம் இயங்கிவருவது குறிப்பிடத்தகுந்ததாகும்.*

*நோய் ஏற்படுவதற்கான காரணங்களாக அதிகநேரம் கண்விழிப்பு, உணவு அதிகம் உண்டல் செரியாமை, மனஅழுத்தம், பெண்போகம் போன்றவற்றைக் குறிப்பிடுவது தற்கால மருத்துவமுறைக்கு முன்னுதாரணமாக அமைகிறது.*

*நோய் ஏற்படாமலிருக்க உணவு உண்ணும் முறை, தூய ஆடை அணிதல், கொதித்த நீரைப் பருகுதல், மோர் அருந்துதல், மலம் மற்றும் சிறுநீரினை அடக்காமலிருத்தல் போன்ற*

*விதிமுறைகளை பின்பற்றினால் உடல் வைரம் போல் உறுதிபடும் என தனது பாக்களில் தேரையர் கூறியிருப்பது தற்கால மருத்துவத்திற்கு முன்னோடியாக அமைகிறது எனலாம்.*

**துணைநூற்பட்டியல்**


1. *அழகப்பராசு. தேரையர் வைத்திய காவியம். இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை, 2012.*
2. *பார்த்திபன். தேரையர் யமக வெண்பா. இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை, 1976.*
3. *தேரன் வைத்திய மகா கரிசல். நந்தி பதிப்பகம்.*
4. *தியாகராசன். தேரையர் வெண்பா மூலமும் உரையும். சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், 1975.*
5. *அப்துல்லா சாகிபு. தேரையர் யமக வெண்பா. தாமரை பதிப்பகம்.*
6. *ராமச்சந்திரன், எஸ். பி. தேரையர் நீர்க்குறி நூல். தாமரை பதிப்பகம்.*
7. *ராமச்சந்திரன், எஸ். பி. தேரையர் வாகடம் மூலமும் உரையும். தாமரை பதிப்பகம்.*


**References**


1. Alagapparaasu. *Theraiyar Vaithiya Kaaviyam*. Department of Indian Medicine and Homoeopathy, 2012.
2. Parthiban. *Theraiyar Yamaga Venba*. Department of Indian Medicine and Homoeopathy, 1976.
3. *Theran Vaithiya Maha Karisal*. Nandhi Publishers.
4. Thiyagarajan. *Therayar Venba Original Text and Commentary*. Siddha Medicine Research Center, 1975.
5. Abdullah Sahib. *Theraiyar Yamaga Venba*. Thamarai Publications.
6. Ramachandran, S. P. *Theraiyar Neerkkuri Nool*. Thamarai Publications.
7. Ramachandran, S. P. *Therayar Vakadam Original Text and Commentary*. Thamarai Publications.